செ.வெ.எண்: 723 16/10/09

## செய்தி வெளியீடு – 16–10–2009

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகள் குறித்து கலந்தாலோசிக்க இன்று (16–10–2009) மாலையில் சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் – மொழி அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோருடைய கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகள் குறித்தும் மாநாடு நடைபெறும் நாட்கள் குறித்தும் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் திரு.க. அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, ஐம்பெருங்குழு, எண்பேராயம் துணைத் தலைவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.ம. இராசேந்திரன், திரு. இரா. முத்துக்குமாரசாமி, டாக்டர் ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் பொன். கோதண்டராமன், பேராசிரியர் ஆ.இரா. வெங்கடாஜலபதி, பேராசிரியர் அ.அ. மணவாளன், பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன், பேராசிரியர் வீ. அரசு, திரு.த. ஜெயகாந்தன், பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியன், டாக்டர் அவ்வை நடராஜன், கவிப்பேரரசு வைரமுத்து, மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, சிலம்பொலி செல்லப்பன், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் மு. மேத்தா, கவிஞர் டாக்டர் ஈரோடு தமிழன்பன் மற்றும் பேராசிரியர் க.ப. அறவாணன் ஆகியோர் பங்கேற்றனர்.

கலந்துரையாடலுக்குப் பிறகு பின்வரும் மூன்று தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1.

இலங்கையில் ஈழத் தந்தை செல்வா அவர்கள் காலத்திலிருந்து தொடங்கி நடைபெறுகின்ற தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்தில் ஒரு கட்டமாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் தங்களின் வாழ்வாதாரங்களை இழக்கக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டு – முள்வேலியிட்ட முகாம்களுக்குள் அவர்கள் அடைபட்டு இன்னலுறும் நிலைமைகளை நேரில் கண்டுணர்ந்து, அவர்தம் துயர் துடைப்பதற்காக இந்தியத் தமிழகத்தில் உள்ள கூட்டணி கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லி சென்று, இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடமும், கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களிடமும் மற்றும் மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம், வெளி உறவுத் துறை அமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோரிடமும் நிலைமைகளை விளக்கி இந்திய, இலங்கை அரசுகளின் ஒப்புதலுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்து பேர் கொண்ட குழு இலங்கை சென்று, இலங்கை அதிபர் திரு. ராஜ பக்சே, மற்றும் இலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றுமுள்ள அமைப்புகள், முகாம்களில் அடைபட்டு அல்லலுறும் இலங்கைத் தமிழர்கள், மற்றும் அவர்களது பிரதிநிதிகள் அனைவரையும் சந்தித்து நிலைமைகளை உணர்ந்து, அந்தத் துன்ப துயரம் நீங்கி இலங்கைத் தமிழர்கள் மீண்டும் அவரவர் வாழ்விடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று வலியுறுத்தி எடுத்துரைத்த கருத்தை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டு இத்திங்கள் 15ஆம் நாள் முதல், முதற்கட்டமாக சுமார் 58 ஆயிரம் தமிழர்களையும் அடுத்தடுத்து படிப்படியாக முகாம்களில் உள்ள மற்ற தமிழர்கள் அனைவரையும் அவரவர் வாழ்விடங்களுக்கு அனுப்பி வைப்பதாக உறுதி தெரிவித்திருப்பதற்கும் –

அவ்வாறு அளித்த உறுதியின்படி முகாம்களில் உள்ள தமிழர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு செல்லும் வகையில் அனுப்பி வைக்கப்படுவதற்கான பணி தொடங்கப் பட்டுள்ளதற்கும் –

இதற்கான முயற்சிகளில் உரிய வழியில் ஈடுபட்ட தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், அதற்கு ஒத்துழைப்பு நல்கிய இந்தியப் பேரரசுக்கும் இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன்;

இத்தகைய மகிழ்ச்சியை முகாம்களில் துயருருகின்ற எஞ்சியுள்ள தமிழர்களும் பெறுதற்குரிய வாய்ப்பினை இலங்கை அரசு உருவாக்கிட இந்திய அரசு ஆவன செய்திட வேண்டுமெனவும்;

இலங்கையில் தமிழர்கள் உள்ளிட்ட எல்லா மக்களும் இன உரிமை, மொழி உரிமை பெற்றிடும் வண்ணம், அந்நாட்டில் அரசியல் தீர்வு காண்பது ஒன்றே சிறந்த வழி என்பதை உணர்ந்து அதற்குரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்திய, இலங்கை அரசுகள் முன் வர வேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை முனைவர் அவ்வை நடராசன் முன்மொழிந்திட, கவிக்கோ அப்துர் ரகுமான் வழி மொழிந்தார்.

## தீ ர் மா ன ம் 2.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், காஞ்சியில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் – கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் என்று அறிவித்திருப்பதற்கு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு போன்ற வெளிநாட்டுத் தமிழறிஞர்களும், ஆர்வலர்களும், தமிழ்நாட்டுத் தமிழறிஞர்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். மேலும் ஆய்வுக் கட்டுரை தயாரிப்பதற்கும், பயணத் திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கும் கூடுதலாக காலம் அளித்திட வேண்டுமென்ற ஆய்வாளர்களின் கோரிக்கையையேற்று, 2010 ஜூன் திங்கள் இறுதி வாரம்

அல்லது ஜூலை முதல் வாரத்தில் இந்த மாநாட்டை நடத்திட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன் வந்திருப்பதை இந்தக் கூட்டம் வரவேற்கிறது.

இந்தத் தீர்மானத்தை முனைவர் ஐராவதம் மகாதேவன் முன்மொழிந்திட, முனைவர் க.ப. அறவாணன் வழி மொழிந்தார்.

தீர்மானம் 3.

மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் கோடை விடு முறை நிறைவடையும் முன்பும் சட்டமன்றப் பொதுத் தேர்தல் பணிகள் தொடங்கப்படுவதற்கு முன்பும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு ஜூன் மாத இறுதி வாரத்தில் நடத்தப்பட, படைப்பாளர்கள், கல்வியாளர்கள் அடங்கிய இக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டதற் கிணங்க ஜூன் மாதம் 24ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை நான்கு நாட்களுக்கு, கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நடத்தலாம் என்று இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.

இந்தத் தீர்மானத்தை முனைவர் பொற்கோ முன்மொழிந்திட, முனைவர் சிலம்பொலி செல்லப்பன் வழி மொழிந்தார்.

.............................................................................................

4/4

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9